பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 15 ஷஃபான் - 1433 ஜூன் - 2012

## போதைவஸ்துப் பாவனை : சமூகச் சீரழிவை நோக்கி...

மதுபோதையிலும் மற்றும் பல மாபாதகச் செயல்களிலும் மூழ்கியிருந்த ஜாஹிலிய்ய சமூகத்தை நபிகளார் (ஸல்) அவர்கள் இஸ்லாம் எனும் அற்புதமான வாழ்க்கை நெறியை அறிமுகப்படுத்தி உலகத்தை ஆளும் உன்னத சமூகமாக மாற்றியமைத்தார்கள். தமது வீடுகளில் மதுக் கலசங்களை அவற்றிடம் மண்டியிட்டு மதிமயங்கிக் கிடந்த சமூகம், அல்லாஹ் மதுபானத்தை ஹராமாக்கி விட்டான் என்ற விபரம் தெரிந்த கணப்பொழுதிலேயே மதுக் கலசங்களை உடைத்தெறிந்து போதைவஸ்துப் பாவனைக்கு அடியோடு முற்றுப் புள்ளி வைத்தது.

அனஸ் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கிறார்கள்: மதுபானம் ஹராம் என்ற இறைவசனம் இறங்கியதும் மதீனாவின் தெருவில் நின்று கெதண்டு ஒரு மனிதர் "அறிந்து கொள்ளுங்கள்! மதுபானம் ஹராமாக்கப்பட்டுவிட்டது என்ற அறிவித்தலை ஓங்கி ஒலித்ததும் அதைச் செவிமடுத்த அன்றைய மக்கள் தமது வீடுகளுக்குச் சென்று மதுக் கலசங்களை உடைத்து மதுபானத்தை தெருக்களில் ஊற்றிவிட்டார்கள். இதனால் அன்றைய தினம் மதீனாத் தெருக்களெல்லாம் மதுபானம் பெருக்கெடுத்து ஓடியது (புஹாரி, முஸ்லிம்).

இத்தகையதொரு உன்னத சமூகத்தின் வாரிசுகளான இன்றைய முஸ்லிம் சமூகத்தின் நிலையை சற்று சிந்தித்தால் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சமூகத்திலுள்ள பலர் மதுபானம்,கஞ்சா போன்ற பல்வேறு போதைவஸ்துப் பொருட்களுக்கு அடிமையாகி குடும்பங்களினதும் சமூகத்தினதும் சீரழிவுக்கு வழியமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

### போதைவஸ்துப் பாவிப்பது பெரும் பாவம்

மதுபானம், கஞ்சா உள்ளிட்ட போதைவஸ்துப் பொருட்களை பயன்படுத்துவதை இஸ்லாம் பெரும் பாவங்களுள் ஒன்றாக அடையாளப்படுத்தியிருக்கிறது. அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான்: "விசுவாசங் கொண்டோரே! நிச்சயமாக மதுவும்,சூதாட்டமும் (வணக்கத்திற்காக) நடப்பட்டுள்ளவை(களான சிலை)களும் குறிபார்க்கும் (சூதாட்ட) அம்புகளும் ஷைத்தானுடைய செயலிலுள்ளஅருவருக்கத்தக்கவையாகும் ஆகவே இவைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.(அதனால்) நீங்கள் வெற்றிபெறுவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம் மதுவிலும் சூதாட்டத்திலும் (அதன் மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும் வெறுப்பையும் உண்டு பண்ணவும் அல்லாஹ்வை நினைவுகூருவதை விட்டும் தொழுகையை (நிறைவேற்றுவதை) விட்டும் உங்களை அவன் தடுப்பதையுமேயாகும். (ஆகவே அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக் கொள்கிறீர்களா?" (5: 90, 91)

நபிகளார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் போதைவஸ்துப் பாவனையின் பாரதூரம் குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் எச்சரித்திருக்கிறார்கள். "போதையூட்டக் கூடிய அனைத்தையும் உங்களுக்கு எச்சரிக்கிறேன்" (நஸாஈ)

"மதுபானம் அருந்தாதீர்கள். நிச்சயமாக மதுபானம் அனைத்துப் பாவங்களுக்கும் தலையானதாகும்." (முஸ்னத் அஹ்மத்)

"மதுபானம் அனைத்துப் பாவங்களினதும் தாயாகும்" (தாரகுத்னி)

அபுத்தர்தா றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : "எனக்கு நபியவர்கள் பின்வருமாறு உபதேசித்தார்கள்: மதுபானம் அருந்தாதீர், அது அனைத்துப் பாவங்களினதும் திறவுகோலாகும்" (இப்னு மாஜஹ்)

### போதை வஸ்துக்கள் வேறு பெயர்களில் ...

சமூகத்தில் மதுபானமும் போதைவஸ்துக்களும் வெவ்வேறு பெயர்களில் உலாவருகின்றன. மருந்தாகப் பயன்படுத்த வேண்டிய 'கொரெக்ஸ்' போன்றவற்றைக் கூட பல இளைஞர்கள் இன்று போதைப்பொருளாக பயன்படுத்துகிறார்கள். நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் : "எனது சமூகத்தில் சிலர் பிற்காலத்தில் மதுபானம் அருந்துவார்கள். அதற்கு வேறு பெயர்களை சூட்டியிருப்பார்கள்" (அபூதாவூத், இப்னு மாஜஹ், இப்னு ஹிப்பான்). எப் பெயரை சூட்டிக்கொண்டாலும் போதைக்காகப் பயன்படுத்தும் அனைத்தும் ஹராம் என்று இஸ்லாம் தடைசெய்துவிட்டது. நபியவர்கள் குறிப்பிட்டார்கள். "போதை தரும் அனைத்துப் பானங்களும் ஹராமாகும்" (இப்னு மாஜஹ்)

### ஈமானை இழத்தல்

போதைவஸ்துப் பாவனை, விபசாரம், களவு ஆகிய பாவங்களில் ஈடுபடுவோர் அப்பாவச் செயல்களில் ஈடுபடும் தருணங்களில் ஈமானை இழந்து விடுகிறார்கள், அவர்களுடைய ஈமான் அவர்களிடமிருந்து கழற்றப்பட்டு விடுவதாக இஸ்லாம் மிகக் கடுமையாக எச்சரிக்கிறது. "ஒரு விபச்சாரி விபச்சாரம் புரியும் நேரத்தில் ஈமானுடன் இருக்கமாட்டான், ஒரு திருடன் திருட்டில் ஈடுபடும் நேரத்தில் ஈமானுடன் இருக்கமாட்டான், மதுபானம்

அருந்தும் போது ஒருவன் ஈமானுடன் இருக்கமாட்டான்'' என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள் (புஹாரி , முஸ்லிம்)

''யார் மதுபானம் அருந்துகிறாரோ, அதன் மூலம் போதைக்குள்ளாகாவிட்டாலும் அவனது வயிற்றினுள் மதுபானத் துளிகள் இருக்கும் வரை அவனது தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதே நிலையில் அவன் மரணித்தால் அவன் காபிராக மரணிக்கிறான். யார் மதுபானம் அருந்தி போதைக்குள்ளாகிறாரோ அவனது 40 இரவுகளின் தொழுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதே நிலையில் அவன் மரணித்து விட்டால் அவன் காபிராகவே மரணிக்கிறான்'' என்றும் நபியவர்கள் எச்சரித்தார்கள். (நஸாஈ)

**அல்லாஹ்வின் சாபம்**

நபியவர்கள் கூறினார்கள் : ''மதுபானத்துடன் தொடர்புபட்ட 10 நபர்கள் அல்லாஹ்வின் சாபத்திற்குட்பட்டவர்களாவார்கள். மதுபானம் அல்லாஹ்வினால் சபிக்கப்பட்டதாகும். இவ்வாறே அதை அருந்துவோர், அதை ஊற்றிக் கொடுப்பவர், அதை விற்பவர், அதை வாங்குபவர், மதுபானம் தயாரிப்பவர், அதற்கு உதவுவோர், அதை சுமந்து செல்வோர், சுமந்து செல்லப்படுவோர், அதனால் கிடைக்கும் வருமானத்திலிருந்து உண்போர் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் சாபத்திற்குட்பட்டவர்களாவர்'' (முஸ்னத் அஹ்மத்)

**மறுமையில்**

யார் தொடராக மதுபானம் அருந்தி தவ்பா செய்யாமல் மரணிக்கிறாரோ அல்லாஹ் அவருக்கு மறுமையில் நரகவாதிகளின் சீழை பானமாக அருந்தக் கொடுப்பான் என்று நபியவர்கள் கூறினார்கள். மேலும் கூறினார்கள்: கோள் சொல்வோர், பெற்றோரை துன்புறுத்துவோர். தொடராக போதைவஸ்து பாவிப்போர் சுவர்க்கம் நுழையமாட்டார்கள். (நஸாஈ)

**தவ்பாவின் வாசல் திறந்திருக்கிறது**

மதுபானம் மற்றும் போதைவஸ்துக்களைப் பாவிப்பது இஸ்லாத்தில் ஹராமாக்கப்பட்ட பெரும்பாவம் என்ற போதிலும் அவற்றை சிறிது கூட தயக்கமின்றி உபயோகிப்போர் சமூகத்தில் பலர் இருக்கிறார்கள். இத்தகையோர் அல்லாஹ்வின் விசாரணைக்கும் மறுமையில் கிடைக்கவிருக்கும் கொடிய தண்டனைக்கும் அஞ்சி, அதிலிருந்து முற்றுமுழுதாக விடுபடவேண்டும். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவோரை பெருங்கருணையுள்ள அல்லாஹ் மன்னிக்க காத்திருக்கிறான். அவர்களுக்கு தவ்பாவின் வாசலை திறந்து வைத்திருக்கிறான். போதை வஸ்து பாவித்து அதிலிருந்து விலகி உண்மையான உள்ளத்தோடு பாவமன்னிப்புக் கோருபவர்களை அல்லாஹ் மன்னிறான் என்று நபியவர்கள் கூறினார்கள்.

எனவே, உலக வாழ்வு என்பது நிலையற்றது. மரணமும் அதற்குப் பின்னுள்ள நிரந்தர வாழ்வும் உண்மையானவை. யாரெல்லாம் இப்பெரும் பாவத்தில் திளைத்திருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் மரணத்தை சற்றேனும் நினைத்துப் பார்த்து, இப்பாவத்திலிருந்து முற்று முழுதாக விடுபட்டு தாம் இத்தனை வருடங்களாக மேற்கொண்ட செயலுக்காக பாவமன்னிப்புக் கோரி தம்மை தூய்மைப்படுத்திக் கொள்வார்களாக. ஏனெனில் தூய உள்ளமும் நற்செயல்களும் உடையோரே நாளை மறுமையில் சுவர்க்கத்தை அடைய முடியும்.

## தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை – ஏறாவூர் முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சபை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன் கருதி, ஏறாவூர் முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சபையினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற முன்னோடிப் பரீட்சை கடந்த 26.05.2012 அன்று மட்/மம/அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது.

ஏறாவூர் முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சபையின் தலைவர் அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. ஜுனைத் (அதிபர்) தலைமையில் இடம்பெற்ற இப் பரீட்சையில் ஏறாவூரிலுள்ள 12 பாடசாலைகளிலிருந்தும் 465 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இப்பரீட்சை வினாத்தாள்கள் திருத்தி, ஆய்வு செய்யப்பட்டு அதன் பெறுபேறுகளும் வினாத்தாள்களும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சை பற்றி கருத்துத் தெரிவித்த இச்சபையின் செயலாளர் ஏ.எம். நாஜீன் (ஆசிரியர்), மாணவர்கள் தேசிய பரீட்சைக்கு முகங் கொடுக்கும் வகையிலும் மாணவர்களது கூச்ச சுபாவம், தடுமாற்றம், பதற்றம் என்பவற்றை களையும் நோக்கிலும் மாணவர்களது பரீட்சை பெறுபேற்று நிலையினை உயர்த்திக் கொள்ளவும், மாணவர்களால் விடப்படும் தவறுகளை திருத்திக் கொள்ளவுமான வாய்ப்பினை இப்பரீட்சை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்ட அவர் பொதுவாக ஏறாவூர் பிரதேச பரீட்சை சித்தி வீதம் கடந்த வருடத்தை அண்மித்ததாகவே காணப்படுவதால் பரீட்சை வினாத்தாளில் மாணவர்கள் அவதானிப்புத் திறன், கிரகித்தல், சொற்திறன், உருக்கோலத் தொடர்பு, கணிதத்திறன் போன்ற திறன்களை மேலும் வளர்த்தெடுக்க முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இப்பரீட்சையின் 2ம் கட்டம் ஜுலை மாத ஆரம்பப் பகுதியில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், இப்பரீட்சை நடாத்துவதற்கு திட்டமிட்ட சபை அங்கத்தவர்கள், அனுமதியளித்த மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

## மட் / றஹ்மானியா மகா வித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களுக்கான விஷேட செயற்றிட்டம் – 2012

ஏறாவூர் மட்/றஹ்மானியா மகா வித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கும் முகமாகவும், கல்வி அடைவு மட்டம் மற்றும் பல்கலைக்கழக சந்தர்ப்பத்தையும் அதிகரிக்கும் நோக்கிலும் விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது. ஐந்து மாத காலத்தை கொண்டுள்ள இத்திட்டம் இவ்வருடம் பெப்ரவரி 15இல் தொடங்கி ஜுன்15இல் முடிவடைந்தது. இதேவேளை இச் செயற்றிட்டம் 2013ல் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஜுலை மாதத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இத்திட்டம் பாடசாலையின் அதிபர் MBMA. சக்கூர் அவர்களின் தலைமையில் ஆசிரியர், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுவதாக இத்திட்டத்தின் இணைப்பாளர் ஆசிரியர் A. றியாஸ் தெரிவித்தார்.

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

**- தொடர் 07**

**(தொடர் 06ல் தொழுகையில் ஸூறதுல் பாதிஹா ஓதுதல் பற்றி கலந்துரையாடப்பட்டது)**

10) ஸூறா பாதிஹாவுக்கு பின் வேறு ஸூறாக்கள் ஓதுதல்

- நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஸூறா பாதிஹாவை ஓதி முடித்த பின் சில வேளைகளில் நீண்ட ஸூறாக்களை ஓதுவார்கள். ம:.மூம்கள் மத்தியில் நோயாளிகள், பிரயாணிகள் இருந்தால் சிறிய ஸூறாக்களை ஓதி சுருக்கிக் கொள்வார்கள். நபிகளாரின் காலத்தில் பெண்களும் பள்ளிவாசலுக்கு வந்து ஐவேளைத் தொழுகைகளை ஜமாஅத்தாகத் தொழுவார்கள். அப் பெண்கள் தம்முடன் சுமந்துவந்த குழந்தைகளின் அழுகுரலை இமாமாக தொழுவிக்கும் நபியவர்கள் கேட்டு விட்டால் அவ்வேளையிலும் சிறிய ஸூறாக்களை ஓதி சுருக்கிக்கொள்வார்கள் (ஹதீஸின் கருத்து – புஹாரி, முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்).

- சில வேளைகளில் ஸூறா பாதிஹாவை ஓதி முடித்த பின் ஏதாவது ஒரு ஸூறாவை இரண்டாகப் பிரித்து இரு றக்அத்துகளில் ஓதுவார்கள் (முஸ்னத் அஹ்மத்)



- சில நேரங்களில் இரு ஸூறாக்களை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பல ஸூறாக்களையும் கூட ஒரு றக்அத்தில் ஓதுவார்கள் (முஸ்லிம்)

11) றுகூஉ செய்தலும் அதில் தாமதித்தலும்

- நபியவர்கள் ஸூறா பாதிஹாவையும் வேறு ஸூறாவையும் ஓதி முடித்த பின் சிறிது நேரம் மௌனமாக நின்று, பின்னர் இரு கைகளையும் உயர்த்தியவாறு அல்லாஹுஅக்பர் என்று கூறிக் கொண்டே றுகூஉ செய்வார்கள் (புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், ஹாகிம்)

* றுகூஉவில் பின்வருமாறு நடந்துகொள்ளுமாறு கட்டளையிட்ட நபியவர்கள் அவ்வாறே செய்தும் உள்ளார்கள்.

- நீர் றுகூஉ செய்தால் உமது இரு உள்ளங்கைகளையும் முழங்காலில் வைத்துக் கொள். உமது கைவிரல்களை சற்று பிரித்து வை. பின்பு ஒவ்வொரு உறுப்பும் அமைதி அடையும் வரை றுகூஉவில் தாமதித்துக் கொள். (இப்னு ஹுஸைமா, இப்னுஹிப்பான்)

- நபியவர்கள் றுகூஉவில் இரு முழங்கைகளையும் விலாவோடு சேர்க்காமல் விலக்கி வைப்பார்கள் (திர்மிதி, இப்னு ஹுஸைமா).

- நபியவர்கள் றுகூஉ செய்தால் தமது முதுகை (வளைக்காமல்) நீட்டி, அம்முதுகில் நீரை ஊற்றினால் நிற்குமளவுக்கு மிக நேர்த்தியாக குனிந்து நிற்பார்கள் (புஹாரி, பைஹகீ, தபரானி).

- நபியவர்கள் தமது தலையை கீழே தாழ்த்தாமலும் மேலே உயர்த்தாமலும் (முதுகும் தலையும் சமமாக இருக்கத்தக்கதாக) நேராக வைப்பார்கள் (முஸ்லிம், அபூதாவூத்).

- பின்வரும் திக்ருகளை நபியவர்கள் மாறி மாறி ஓதிக்கொள்வார்கள்.

سُبْحَانَ رَبِّىَ الْعَظِيم

سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اللَّهُمَّ اغْفِرْ لِي

سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلَائِكَةِ وَالرُّوحِ

- றுகூஉ, ஸுஜூது ஆகிய நிலைகளில் (பர்ளு, ஸுன்னத் ஆகிய இரு தொழுகைகளிலும்) அல்குர்ஆன் வசனங்களை ஓதுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

'றுகூஉவிலும் ஸுஜூதிலும் அல்குர்ஆன் (வசனங்களை) ஓதுவது அல்லாஹ்வினால் எனக்கு தடை செய்யப்பட்டுள்ளது' என நபியவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்)

சுருக்கமாக நோக்கினால், றுகூஉ செய்யும் போது பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

- அல்லாஹுஅக்பர் என்று சொல்லிக்கொண்டு இரு கைகளையும் இரு தோற்புயங்களுக்கு நேராக அல்லது இரு காதுகளுக்கு நேராக உயர்த்திய வண்ணம் றுகூஉக்குச் செல்லுதல்.

- இரு உள்ளங் கைகளையும் கடுமையாக விரிக்காமலும் பொத்தாமலும் இரு முழங்கால்களில் வைத்தல்

- தலை, முதுகு இரண்டையும் ஒரே நேராக சமமாக வைத்தல்.

- இரு முழங்கைகளையும் விலாவோடு சேர்க்காமல் சிறிது விலக்கிவைத்தல்.

மேற்கூறப்பட்ட அனைத்து முறைகளும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானவையாகும்.

* மேற்கூறப்பட்ட முறைகளுக்கு மாற்றமாக,

- இரு கைகளையும் தோற்புயங்களுக்கு அல்லது காதுகளுக்கு நேராக உயர்த்தாமல் றுகூஉக்கு செல்லுதல்,

- றுகூஉவில் தாமதிக்காமல் விடுதல்,

- இரு கைகளையும் முழங்காலில் வைக்காமல் முழங்காலுக்கு மேலே அல்லது கீழே வைத்தல்,

- இரு முழங்கைகளையும் விலாவோடு சேர்த்து வைத்தல்,

- முதுகையும் தலையையும் ஒரே நேராக வைக்காமல் வளைந்து அல்லது கடுமையாக குனிந்து நிற்றல் ஆகிய அனைத்தும் பிழையானவையும் நபிகளாரின் வழிமுறைக்கு முரணானவையும் தொழுகையின் பூரணத்தன்மையில் குறைவை ஏற்படுத்துபவையுமாகும்.

-இன்ஷாஅல்லாஹ் தொடரும்-

# துஆவின் முக்கியத்துவமும் கூட்டு துஆ பற்றிய ஓர் இஸ்லாமியப் பார்வையும்

**தொடர் - 03** **- அபூ ஸைனப்**

கடந்த இதழில் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஐவேளைத் தொழுகைகளுக்குப் பின் ஓதிய திக்ருகள், துஆக்களை அறிந்துகொண்டோம். அந்த திக்ருகளும் துஆக்களும் இன்றும் கூட அதிகமான பள்ளிவாசல்களில் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையும் அதை அங்கீகரித்திருக்கிறது. நபியவர்கள் ஓதிய அந்த திக்ருகளில் இடம்பெறும் வார்த்தைகள் 'என்னை... எனக்கு...' என்பதாக ஒருமையான வாசக அமைப்பையே கொண்டிருக்கின்றன. நபியவர்கள் ஐவேளைத் தொழுகைகளுக்குப் பின் ஒருபோதும் கூட்டு துஆ ஓதவில்லை என்பதையும் அவ்வாறு கூட்டு துஆ ஓதியிருந்தால் பன்மையான வாசக அமைப்பைப் பயன்படுத்தியிருப்பார்கள் என்பதையும் இதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.

இதே வேளை கூட்டு துஆவுக்கு ஆதாரமாக சிலர் சில ஹதீஸ்களை முன்வைக்கின்றனர். அவற்றையும் அவற்றுக்கான விளக்கங்களையும் இன்ஷா அல்லாஹ் ஒவ்வொன்றாக நோக்குவோம் :

**முதலாவது ஆதாரம் :**
ஒரு கூட்டம் ஒன்று கூடி சிலர் துஆ ஓத, மற்றவர்கள் ஆமீன் சொன்னால் அல்லாஹ் அவர்களின் பிரார்த்தனைகளை அங்கீகரிப்பான் (நூல் : ஹாகிம்).

**விளக்கம் :**
இது மிகவும் பலவீனமான ஒரு ஹதீஸ் என்பது ஹதீஸ் கலை ஆய்வாளர்களின் தீர்ப்பாகும். ஏனெனில் இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களில் ஒருவரான இப்னு லஹீஆ என்பவர் நம்பத்தகாத பலவீனமானவர் என்பதாக பிரபல ஹதீஸ் கலை மேதைகளான இமாம் புஹாரி, அபூஹாதிம், இப்னு முஈன், தஹாவி உள்ளிட்ட பலர் சுட்டிக்காட்டுகின்றனர் (நூல் : தஹ்தீபுத் தஹ்தீப், பாகம் : 5). ஒரு பலவீனமான ஹதீஸ் அமலுக்கு ஆதாரமாகக்கொள்வதற்கு தகுதியற்றது என்பது ஹதீஸ் கலை அடிப்படை விதிகளுள் ஒன்றாகும்.

மேலும் இந்த ஹதீஸ் அறிவிப்பாளர்களுள் ஒருவரான இப்னு லஹீஆ என்பவர் பலவீனமானவர் என்பது மட்டுமன்றி அறிவிப்பாளர் வரிசை தொடர்பறுந்ததாகவும் இருக்கிறது. தொடர்பறுந்த அறிவிப்பாளர் வரிசையைக் கொண்ட ஹதீஸ் மிகமிகப் பலவீனமானதாகும் என்பது ஹதீஸ்கலையின் மற்றுமொரு அடிப்படை விதியாகும். எனவே மேற்படி ஹதீஸ் இரு வகைகளில் மிகப் பலவீனமானது என்பதாலும் வேறு நம்பகமான அறிவிப்பாளர்களினூடாக இந்த ஹதீஸ் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதனாலும் எவ்வகையிலும் இதை ஆதாரமாகக் கொள்ளமுடியாது.

**இரண்டாவது ஆதாரம் :**
யூதர்கள் ஒரு பொறாமைக்கார சமூகம். நீங்கள் ஸலாம் சொல்வதிலும் ஆமீன் கூறுவதிலும் பொறாமைப்படுவது போன்று வேறு எதிலும் பொறாமைப்படுவதில்லை.

**விளக்கம் :**
ஸஹீஹ் இப்னு ஹுஸைமா, இப்னு மாஜஹ் போன்ற ஹதீஸ் நூல்களில் இடம்பெறும் மேற்படி ஹதீஸைக் குறிப்பிட்டு, ஆமீன் கூறுதல் என்பது கூட்டு துஆ கேட்கும் போதுதான் சாத்தியமாகும் என்பதால் இதை ஆதாரமாகக்கொண்டு கூட்டு துஆ செய்ய முடியும் என்று சிலர் வாதிடுகின்றனர். இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானது என்பதில் ஐயமில்லை. ஆயினும் இந்த ஹதீஸில் குறிப்பிடப்படும் ஆமீன் கூறுதல் என்பது சத்தமிட்டு ஓதித் தொழப்படும் தொழுகைகளில் (மஃரிப், இஷா, ஸுப்ஹ்...) ஸூறா பாதிஹா ஓதி முடிந்த பின் அனைவரும் சேர்ந்து ஆமீன் கூறுவதைத்தான் நபியவர்கள் குறிப்பிட்டார்களேயன்றி, தொழுகை முடிந்தபின் ஒருவர் துஆ ஓத, மற்றவர்கள் ஆமீன் கூறுவதை நபியவர்கள் ஒருபோதும் குறிப்பிடவில்லை.

இது கூட்டு துஆவுக்கு ஆதாரமானது என்று ஒரு வாதத்திற்கு வைத்துக்கொண்டால், நபியவர்கள் கூட்டு துஆ ஓதுமாறு கூறிவிட்டு அவர்களே கூட்டு துஆ ஓதவில்லை என்றாகிவிடும். ஏனெனில் நபியவர்கள் தொழுகைளுக்குப் பின் கூட்டு துஆ ஓதியதற்கு ஹதீஸ்களில் எந்தவொரு ஆதாரமும் இல்லை என்பது, கூட்டு துஆ ஓத வேண்டும் என்று கூறுவோரும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயமாகும்.

மேலும் இந்த ஹதீஸை தமது நூல்களில் பதிவுசெய்துள்ள இமாம்களான இப்னு மாஜஹ், இப்னு ஹுஸைமா ஆகியோர் தொழுகைகளில் ஸூறா பாதிஹா ஓதிமுடித்த பின் ஆமீன் கூறுதல் என்ற தலைப்பிலும் அதன் தொடரிலுமே பதிவுசெய்திருக்கிறார்கள் என்பது அழுத்தமாகக் கவனிக்கவேண்டிய விடயமாகும்.

ஆகவே, ஸூறா பாதிஹாவுக்குப் பின் ஆமீன் என்று கூறப்படுவதைப் பார்த்துத்தான் யூதர்கள் பொறாமைப்படுகிறார்கள் என்பது தெட்டத்தெளிவான விடயமாகும். சத்தமிட்டு ஓதித் தொழப்படும் தொழுகைகளில் ஸூறா பாதிஹாவுக்குப் பின் சத்தமிட்டு ஆமீன் கூறுவதை பிழையானது என்று யாரும் கூறவில்லை. நபியவர்கள் எதற்காக இந்த ஹதீஸைக் கூறினார்களோ அதை முழுவதுமாகத் திசைதிருப்பி, நபியவர்களோ, ஸஹாபாக்களோ ஒரு போதும் செய்யாத ஒரு செயலுக்கு ஆதாரமாகக் காட்டுவது மிகப்பெரும் தவறாகும்.

**மூன்றாவது ஆதாரம் :**
'யாராவது ஒருவர் ஒரு கூட்டத்தாருக்கு இமாமாக இருந்து தொழுகையை நடாத்திய பின் (மஃமூம்களை விட்டுவிட்டு) தனக்கு மட்டும் துஆக் கேட்பது ஹலாலாகமாட்டாது. அவ்வாறு செய்தால் மஃமூம்களுக்கு மோசடி செய்துவிட்டான்'.

**விளக்கம் :**
திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜஹ், முஸ்னத் அஹ்மத் ஆகிய ஹதீஸ் நூல்களில் மேற்படி ஹதீஸ் இடம்பெற்றாலும் அதில் தொழுகையை நடாத்திய பின் என்ற வாசகம் இடம்பெறவே இல்லை. தமது கருத்தை நியாயப்படுத்துவதற்காக நபியவர்கள் கூறிய ஒரு விடயத்தில் இடைச்செருகல் செய்வது நபியவர்கள் மீது பொய்யாக இட்டுக்கட்டுவதாகவே கருதப்படும். நபியவர்கள் கூறினார்கள் : 'யார் என்மீது வேண்டுமென்று பொய்யுரைக்கிறாரோ அவர் நரகத்தில் தனது தங்குமிடத்தை ஒதுக்கிக்கொள்ளவும்' (புஹாரி, முஸ்லிம்).

அப்படியானால் மேற்படி ஹதீஸ் எதைக் குறிப்பிடுகிறது?

தொழக்கூடிய ஒருவர் ஸுஜூத், அத்தஹிய்யாத்தின் இறுதிப் பகுதி (அதாவது ஸலாம் கொடுப்பதற்கு முன்பு) ஆகிய நிலைகளில் தனக்குத் தேவையானவற்றை அல்லாஹ்விடம் கேட்டுப் பிரார்த்திக்க முடியும் என்று நபியவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

நபியவர்கள் கூறினார்கள் : 'நீங்கள் அத்தஹிய்யாத்துக்காக அமர்ந்தால் (அத்தஹிய்யாத் முழுவதும் ஓதி முடித்த பின்) தனக்கு விருப்பமான பிரார்த்தனைகளை அல்லாஹ்விடம் பிரார்த்திக்கவும்' (நஸாஈ, அஹ்மத்). மேலும் நபியவர்கள் கூறினார்கள் : 'ஓர் அடியான் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் நிலை ஸுஜூதுடைய நிலையாகும். எனவே ஸுஜூதில் அதிகமாக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கொள்ளுங்கள்' (முஸ்லிம், பைஹகீ).

எனவே ஸுஜூதிலும் அத்தஹிய்யாத்தின் இறுதிப் பகுதியிலும் பிரார்த்திக்கும் போது இமாமாக இருக்கும் ஒருவர் தனக்காக மட்டும் பிரார்த்தனை புரியாமல் ம.்.மூம்களுக்காகவும் பிரார்த்தனை புரிய வேண்டும் என்பதைத்தான் மேற்படி ஹதீஸ் குறிப்பிடுகிறது.

**நான்காவது ஆதாரம் :**
நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் துஆ ஓத, ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஆமீன் கூறினார்கள்.

**விளக்கம் :**
ஸஹீஹ் இப்னு ஹுஸைமா எனும் நூலில் இடம்பெறும் மேற்படி செய்திக்கு இரண்டு விதமான விளக்கங்கள் காணப்படுகின்றன:
1. இது ஏற்றுக்கொள்ள முடியாத பலவீனமான செய்தி என்று பிரபல ஹதீஸ் கலை ஆய்வாளர்களான ஹாபிழ் இப்னு அப்தில் பர் மற்றும் ஹாபிழ் இப்னு ஹஜர் ஆகியோர் குறிப்பிடுகின்றனர் (நூல் : பத்ஹுல் பாரி - ஸஹீஹுல் புஹாரியின் விரிவுரை நூல், பாகம் : 02).
2. மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் காலத்தில் நாம் தொழுகின்ற இத் தொழுகை இருக்கவில்லை. கூட்டுத் தொழுகையும் இருக்கவில்லை.

எனவே மூஸா நபி அவர்களின் காலத்தில் இல்லாத ஒன்றை ஆதாரமாகக் காட்ட முனைவது நேரத்தை வீணடிக்கின்ற அர்த்தமற்ற முயற்சியாகும்.

எனவே, கூட்டு துஆவுக்கு முன்வைக்கப்படும் ஆதாரங்கள் அனைத்தும் மிகப் பலவீனமானவையும் எவ்விதத் தொடர்பற்றவையும் வாதத்தை திசைதிருப்புகின்ற அர்த்தமற்ற கூற்றுகளுமாகும் என்பது தெட்டத் தெளிவான, உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையாகும். இவை போன்று இன்னும் சில ஆதாரங்களும் முன்வைக்கப்படுகின்றன. அவை பற்றிய தெளிவை இன்ஷா அல்லாஹ் மறு இதழில் காணலாம்.


மார்க்க விடயங்களையும் தஃவா செய்திகளையும் உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள
**f evrtj** என்று **Type** செய்து 40404க்கு SMS அனுப்பி வையுங்கள்.
இது முற்றிலும் இலவசமானது.
(Airtel & Hutch வலையமைப்புகளைத் தவிர)


# ஐயமும் தெளிவும்

**ஐயம் :** ஸம்ஸம் நீர் அருந்தும் போது எதை நினைத்தாலும் நிறைவேறுமா? இதற்கு ஆதாரம் உண்டா?
- MK. பாதிமா, பழைய சந்தை வீதி, ஏறாவூர் 03

**தெளிவு :** வற்றாத நீரூற்றான ஸம்ஸம் நீரின் மகத்துவம் பற்றி பல ஹதீஸ்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஸஹீஹ் முஸ்லிம் என்ற ஹதீஸ் நூலில் இடம்பெற்றிருக்கின்ற ஒரு நீண்ட ஹதீஸில் நபியவர்கள் "ஸம்ஸம் நீர் பறகத் செய்யப்பட்ட நீராகும். அது பசியாற்றும் உணவும் நோய்க்கு நிவாரணியுமாகும்" என்று குறிப்பிடுகிறார்கள். இது ஆதாரபூர்வமான ஹதீஸ் என்பதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை.

ஸம்ஸம் நீரின் மகத்துவம் பற்றி மற்றுமொரு ஹதீஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றது : "ஸம்ஸம் நீர் எதற்காக அருந்தப்படுகிறதோ அது நிறைவேறும்" இப்னு மாஜஹ், முஸ்னத் அஹ்மத், பைஹகீ போன்ற மற்றும் பல ஹதீஸ் நூல்களில் இடம்பெறும் இந்த ஹதீஸ் தொடர்பில் ஹதீஸ் கலை ஆய்வாளர்கள் மத்தியில் கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன.

முற்கால ஹதீஸ் கலை அறிஞர்களான ஸுப்யான் இப்னு உயைனா, இப்ன ஹுஸைமா, இப்னு ஹஜர், ஸர்கானீ, ஸர்கஷி, இப்னுல் கய்யிம் (றஹிமஹுமுல்லாஹ்) உட்பட மற்றும் பலரும் தற்கால ஹதீஸ்கலை அறிஞர்களான அல்பானீ, ஷுஐப் அல் அர்னஊத், இப்னு உஸைமீன் (றஹிமஹுமுல்லாஹ்) ஆகியோரும் இந்த ஹதீஸை ஆதாரபூர்வமானது என்று குறிப்பிடுகிறார்கள்.

இதே வேளை இமாம் நவவி, பூஸீரி, அபூஹப்ஸ் ஆகியோர் இந்த ஹதீஸ் பலவீனமானது என்று குறிப்பிடுகின்றனர். ஆதாரபூர்வமானது என்று குறிப்பிடுவோர் அதிகம் பேர் காணப்படுகின்றனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் அப்துல்லாஹ் இப்னு முஅம்மல் என்பவர் பலவீனமானவர் என்பதனால் இந்த ஹதீஸ் பலவீனமானது என்று குறிப்பிட்டாலும், வேறு சில ஆதாரபூர்வமான அறிவிப்பாளர் வரிசைகளினூடாக அறிவிக்கப்படுவதால் இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானது என்ற முடிவுக்கே வரமுடிகின்றது. பெரும்பாலான ஹதீஸ்கலை ஆய்வாளர்களின் முடிவும் அதுவேயாகும். ஏனெனில் ஒரு ஹதீஸ் பலவீனமானதாக இருந்த போதிலும் அந்த ஹதீஸின் கருத்து வேறு பல நம்பகமான அறிவிப்பாளர் வரிசைகளினூடாக அல்லது வேறு பல ஆதாரபூர்வமான வழிகளினூடாக அறிவிக்கப்படுமாயின் அந்த ஹதீஸை ஏற்றுக்கொள்ள முடியும் என்பது ஹதீஸ்கலையின் ஓர் அடிப்படை விதியாகும்.

இதன் அடிப்படையில் ஸம்ஸம் நீர் என்பது பறகத் செய்யப்பட்ட, நோய் நிவாரணியாக அமையக்கூடிய மகத்துவமிக்க நீராகும். அதை நல்ல நோக்கங்களுக்காக அருந்துவதன் மூலம் அல்லாஹ் ஒருவரது நோக்கங்களை நிறைவேற்றிக்கொடுக்கிறான். அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

# நரகவிடுதலை பெற்றுத் தரும் தர்மம்

**- எம்.வை. அப்துஸ் ஸமத்**

செல்வந்தர்களின் கடமை பற்றி இஸ்லாம் வலியுறுத்திய அளவுக்கு வேறு எந்த மார்க்கமும் வலியுறுத்தியது கிடையாது. அல்லாஹ் மனிதனை தன்னுடைய பிரதிநிதியாக படைத்துள்ளான். அவர்களின் செல்வந்தர்களை ஏழைகளின் பிரதிநிதியாக ஆக்கியுள்ளான். அல்லாஹ் வழங்கியவற்றில் இருந்து நீங்கள் செலவு செய்யுங்கள் என்று குறிப்பிடுவதன் மூலம் இதனை நாம் தெரிந்து கொள்ள முடியும். ஒருவர் தன்னுடைய திறமையினால் பணக்காரர் ஆவதில்லை. அல்லாஹ்வே சிலரை செல்வந்தராக்குகிறான். எனவே, செல்வம் என்பது அல்லாஹ் வழங்கியுள்ள அருளாகும். இந்த பெரும் அருளைக் கொண்டு அதிக நண்மைகளை சம்பாதிக்கவும் முடியும். இதனைக் கொண்டு நரகத்தின் சொந்தக்காரர்களாகவும் முடியும்.

இறைவன் பலருக்கு அவர்களின் தேவைக்கும், அவர்களின் குடும்பத்தினரின் தேவைக்கும் அதிகமாகவே செல்வத்தைக் கொடுத்திருக்கின்றான். தனது வாழ்நாளைவிட அதிக செல்வத்தை கொடுத்திருக்கின்றான் என்றால் இவருடைய தேவைக்குப் போக ஏனையது ஏழைகளுக்கு என அல்லாஹ் விதித்திருப்பதை ஒவ்வொரு செல்வந்தரும் புரிந்து கொள்ள வேண்டும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். 'ஆதமுடைய மகன் எல்லாம் என்னுடையது என்னுடையது என்று கூறுகின்றான். அது அவனுடையதன்று. அவன் தின்று கழித்ததும், உடுத்துக் கிழித்ததும், பிறருக்கு கொடுத்ததும்தான் அவனுடையது' என்று குறிப்பிடுவதன் மூலம் மனிதனுக்கு சொந்தமானது நிரந்தர நண்மை தரக்கூடியதும், பிறருக்குக் கொடுத்ததும் தான் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

நாம் கொடுக்கின்ற தர்மம் பேரித்தம் பழத்தின் அளவு சிறிதாக இருந்தாலும் இறைவன் அதை தனது வலக்கரம் நீட்டி வாங்குகின்றான் என்று நபியவர்கள் கூறினார்கள். இது அடியார்கள் செய்யும் தர்மத்தினை இறைவன் கண்ணியப்படுத்துவதனையே குறிப்பிடுகின்றது. நபியவர்கள் மேலும் குறிப்பிட்டார்கள் : ஓர் ஈத்தம்பழத் துண்டை தர்மம் செய்தேனும் நரகத்தை அஞ்சிக்கொள்ளுங்கள் (புஹாரி, முஸ்லிம்). அல்லாஹ்தான் பணக்காரன் நீங்கள் எல்லாம் ஏழைகள் என்று அல்குர்ஆனில் குறிப்பிடும் அல்லாஹ், வானம் அல்லாஹ்வுடையது, இந்த பூமி அல்லாஹ்வுடையது இதில் உள்ள அனைத்திற்கும் அதிபதியான அல்லாஹ் ஒரு சிறிய பேரீச்சம்பழ அளவு தர்மத்தையும் தான் அன்போடு வாங்குவது மட்டுமல்ல அதனை வளர்க்கின்றான் எனவும் அல்லாஹ் 2:261 வது வசனத்தின் மூலம் குறிப்பிடுகின்றான். மேலும் அதனை வளர்த்து மறுமையில் மீண்டும் அதை உங்களுக்கே திருப்பித்தருவதாகவும் கூறுகின்றான்.

தர்மம் என்பது செல்வந்தர்களுக்கு மட்டுமே உரிய கடமை மட்டுமல்ல, அது ஏழைகளுக்கும் உரிய கடமை. ஏனெனில் அல்லாஹ்வுடைய தூதர் ஏழைகளுக்கெல்லாம் ஏழை மேலும் அல்லாஹ்வுடைய தூதர் பேரீச்சம் பழத்தின் துண்டையாவது தர்மம் செய்து நரக நெருப்பிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளும்படி கட்டளையிடுகிறார்கள். இதன் மூலம் அவரவரின் தகுதிக்கு ஏற்ப தர்மம் செய்ய வேண்டும் என்பதே வலியுறுத்தப்படுகின்றது.

மேலும், பொறாமை கொள்வது மிகக்கடுமையான பாவம் என எச்சரிக்கும் இஸ்லாம் இரண்டு விடயங்களுக்காக பொறாமை கொள்வதைக் கூட ஆகுமாக்கியிருக்கின்றது. அதில் ஒருவர் கல்வி கற்று அதை அல்லாஹ்வுக்காக பயன்படுத்துபவர். மற்றவர் அல்லாஹ்வின் பாதையில் வாரி வழங்கும் வள்ளல். இவர்களைப் பார்த்து பொறாமைப்பட்டு நானும் இவர் போன்று கொடுக்க வேண்டும் என ஆசைப்பட வேண்டும்.

மேலும் மரணம் வருவதற்கு முன் நாம் கொடுத்தவற்றில் இருந்து செலவு செய்யுமாறு அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது. எனவே, ஒவ்வொருவரும் தாம்மம் செய்ய நினைத்தால் உடனே அதை நிறைவேற்றிட வேண்டும். அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான்: உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு முன்பே நாம் உங்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து (தர்மமாக) செலவுசெய்யுங்கள். (அவ்வாறு செய்யாதவர் தனது மரணத் தறுவாயில்) என் இரட்சகனே! சொற்ப காலத்திற்கு என்னை நீ பிற்படுத்தக்கூடாதா? (அவ்வாறு பிற்படுத்தினால்) நான் தர்மம் செய்து நல்லோர்களில் உள்ளவனாக ஆகிவிடுவேன் என்று கூறுவான் (அல்குர்ஆன் 63 : 10)

செல்வந்தர்கள் செல்வத்தை செலவு செய்வதால் நற்கூலி அதிகம் உண்டு எனக்கூறும் இஸ்லாம் அதை செலவு செய்யாவிட்டால் கடுமையான வேதனை உண்டு எனவும் குறிப்பிடுகின்றான். அல்லாஹ்வின் பாதையில் செல்வங்களை செலவு செய்யாமல் பதுக்கி வைப்பவர்கள் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான் : பொன்னையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக்கொண்டு அதனை அல்லாஹ்வுடைய பாதையில் செலவுசெய்யாமல் இருப்போருக்கு (நபியே) நீர் துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு நன்மாராயம் கூறுவீராக. நரக நெருப்பில் அவர்கள் சேமித்து வைத்த தங்கள், வெள்ளி என்பன சூடேற்றப்பட்டு அவர்களது நெற்றிகளிலும், முதுகுகளிலும், விலாக்களிலும் சூடிடப்படும். அப்போது இதுதான் நீங்கள் சேமித்தவை, சுவைத்துப்பாருங்கள் என்றும் கூறப்படும் (அல்குர்ஆன் 9 : 34, 35).

மேலும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது ஒவ்வொரு தொழுகையிலும் அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத் தேடிய விடயம் கஞ்சத்தனம், கோழைத்தனம் என்பனவாகும். இதன் மூலம் பிறருக்கு கொடுக்காமல் இருப்பது எவ்வளவு குற்றம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தர்மத்தின் மூலம் பெறும் சிறப்புக்கள்:
1. அல்லாஹ்வின் திருப்தியும், பாதுகாப்பும்.
2. நரக விடுதலை
3. ஏழைகளின் பிரார்த்தனை
4. அல்லாஹ்வின் அர்ஷின் நிழல்
5. செல்வத்திற்கான பாதுகாப்பு

மேற்படி விடயங்களை கருத்திற்கொண்டு நாமும் அல்லாஹ்வுடைய பாதையில் வாரி வழங்கக்கூடிய வள்ளல்களாக மாறுவோமாக.


**ஐயமும் தெளிவும்**

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்.த.பெ. இல: 02, ஏறாவூர்

## மாதம் ஒரு துஆ

**வலி, நோவு போன்றவற்றிலிருந்து சுகம் பெற...**

(பின்வரும் துஆவை வலி, நோவு ஏற்பட்டுள்ள இடத்தில் வலது கையை வைத்து 07 தடவைகள் ஓதினால் இன்ஷா அல்லாஹ் சுகம் கிடைக்கும். )

உஸ்மான் இப்னு அபில் ஆஸ் ரழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து என்னை அழித்து விடும் அளவுக்கு எனது உடலில் கடும் வலி உண்டாகியிருந்தது. நபியவர்களிடம் அதுபற்றி முறையிட்ட போது அவர்கள், வலி ஏற்பட்ட இடத்தில் எனது வலது கையை வைத்து பிஸ்மில்லாஹ் என்று மூன்று முறை கூறி பின்வரும் துஆவை ஏழு தடவைகள் ஓதுமாறு கூறினார்கள். நானும் அவ்வாறே செய்தேன். அல்லாஹ் எனது நீண்ட நாள் வலியை குணப்படுத்திவிட்டான்.

أَعُوذُ بِاللَّهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَأُحَاذِرُ

**அஊது பில்லாஹி வகுத்ரதிஹீ மின் ஷர்ரி மாஅஜிது வஉஹாதிரு**

**பொருள் :** எனக்கு ஏற்பட்டிருக்கும் வலியின் தீங்கை விட்டும் நான் அஞ்சுவதன் தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் அவனது வல்லமையின் மூலம் பாதுகாப்புத் தேடுகிறேன். (ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம்)

## சிறிய செயல்கள்! அதிக நன்மைகள்!!

**01. நோயாளியை சுகம் விசாரிக்கச் செல்லல்.**

நபியவர்கள் கூறினார்கள் : “யார் ஒரு நோயாளியை சுகம் விசாரிக்கச் செல்கிறாரோ அவர் அங்கிருந்து திரும்பி வரும்வரை சுவர்க்கத்தின் பழத்தோட்டங்களில் இருந்து கொண்டிருக்கின்றார்.” (ஆதாரம்: முஸ்லிம்)

நபியர்வர்கள் கூறினார்கள் : “ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிம் நோயாளியை காலை வேளையில் சுகம் விசாரிக்கச் சென்றால் மாலையாகும்வரை எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக பாவமன்னிப்புக் கோருகிறார்கள். மாலை வேளையில் சுகம் விசாரிக்கச் சென்றால் காலையாகும் வரை அவருக்காக எழுபதாயிரம் மலக்குகள் பாவமன்னிப்புக் கோருகிறார்கள். மேலும் அவருக்காக சுவர்கத்தில் பழத்தோட்டமும் காத்திருக்கின்றது.” (ஆதாரம் : திர்மிதி, அபூதாவூத்)

**02. ஸப்புகளில் இடைவெளிகளை நிரப்புதல்.**

நபியவர்கள் கூறினார்கள் : “தொழுகை ஸப்புகளில் யார் இடைவெளியை நிரப்புகிறாரோ அல்லாஹ் அவருடைய அந்தஸ்த்தை உயர்த்துகிறான். மேலும் அவருக்காக சுவர்கத்தில் ஒரு வீட்டையும் கட்டுகின்றான்.” (ஆதாரம் : தபராணி)

நபியவர்கள் கூறினார்கள் : “யார் ஸப்புகளிலுள்ள இடைவெளியை நிரப்புகிறாரோ அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும்.” (ஆதாரம் : முஸ்னதுல் பஸ்ஸார்)


மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள

யூரோ போன் வேர்ல்ட்

இல.17, பிரதான வீதி, ஏறாவூர்

Fax: 065 2240283

டயலொக் மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) மற்றும் மின்சாரப் பட்டியல் இங்கே செலுத்த முடியும்.

மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

CGS

இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணணி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?

சேவைகள்

01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

இன்றே அழையுங்கள் 0772300420

ஏறாவூரில்

COMPUTERS & REPAIRING



# பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. தொழுகையில் துஆ கேட்பதற்கு அனுமதிக்கப்பட்ட இரு நிலைகள் எவை?
2. றுகூஉ செய்யும் போது விடப்படும் ஒரு தவறை சுட்டிக்காட்டுக.
3. அண்மையில் மரணித்த முடிக்குரிய இளவரசர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?
4. மதுபானம் ஹறாம் என்பதை குறிப்பிடும் வசனம் எந்த அத்தியாயத்தில் இடம்பெறுகிறது?
5. ஸம் ஸம் நீர் நோய் நிவாரணி என்று குறிப்பிடும் ஹதீஸ் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **09.07.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**முதலாம் இடம் :** R. மின்ஹா, தைக்கா வீதி, ஏறாவூர் 01
**இரண்டாம் இடம் :** R. நஸீஹா பானு, மாவடி வீதி, ஏறாவூர் 01
**மூன்றாம் இடம் :** MHM. இர்ஷாத், அஷ்ரப் வீதி, ஏறாவூர் 02

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. MI. இஸ்மத் நூரி, நூரி மஹால், G.J.M. வீதி, புதிய காத்தான்குடி 03
2. MK. பாதிமா, பழைய சந்தை வீதி, ஏறாவூர் 03
3. JF. ஸர்மி, முகாந்திரம் குறுக்கு வீதி, ஏறாவூர் 06A
4. M. பாதிமா றிப்கா, ஓட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் 06
5. MSF. இன்ஸிரா, A.K.M. குறுக்கு வீதி, ஏறாவூர் 3A

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. ஓதப்படும் வஹி
2. ஷிர்க்குடன் இணைந்த நேர்ச்சை
3. ஸ.்.த் றழியல்லாஹு"அன்ஹு
4. ஸலாம் கூறுவதும் ஆமீன் சொல்வதும்
5. நமது கட்டளையின்றி யார் ஒரு செயலைச் செய்கிறாரோ அச் செயல் நிராகரிக்கப்படும்


**CGS**
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94772300420, +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk



உங்களது கணணி தகமைகளை **CGS** உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**CGS இன் கணணி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids


தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0772300420



**MOBILE PHONE & ACCESSORIES**



**COMPUTER ACCESSORIES**



**MULTIMEDIA PLAYERS**



Pay Less Get More
**R-tel COMMUNICATION**

ஏ.ஆர்.எம் ஹாஜி கட்டிடம், பிரதான வீதி, ஏறாவூர்-03 (பழைய பொம்பே பசார் எதிரில்)
TEL: 065 22 400 33 MOB: 077 877 22 00 Email: rtelcomm@gmail.com